# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 156/ந/2017

ஆணை எண். 224/2017

நாள் : 08/09/2017

திரு G. குமரேசன்,
ஜோலார்பேட்டை, – முறையீட்டு மனுதாரர்

1) திரு மு. கார்த்திகேயன்,
நகராட்சிப் பொறியாளர், – எதிர்மனுதாரர்கள்
2) ப.பிரேம் ஆனந்தன்,
உதவியாளர்,
ஆம்பூர் நகராட்சி.

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை, ஏலகிரி அஞ்சல், எண்.63, தாமரைக்குளம் முகவரியில் வசிக்கும் திரு G. குமரேசன் அவர்களது 03.05.2017 நாளிட்ட முறையீட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 15.07.2017 நாளிட்ட படிவத்துடன், 19.07.2017 அன்று பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட முன்றயீட்டு மனு, 156/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. எதிர் மனுதார்ர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை, ஏலகிரி அஞ்சல், எண்.63, தாமரைக்குளம் முகவரியில் வசிக்கும் திரு G. குமரேசன் என்பவர் தனது 03.05.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஆம்பூர் நகராட்சிப் பொறியாளர் திரு மு. கார்த்திகேயன் மற்றும் உதவியாளர் திரு ப. பிரேம் ஆனந்தன் ஆகியோர் கையூட்டுக் கோரியதாகக் குற்றச்சாட்டினைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் விவரம் வருமாறு :-

(i) 14.10.2016 அன்று வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டபடி, ஆம்பூர் நகராட்சியில் TURIP திட்டம் மூலம் தார்ச்சாலை அமைப்பதற்கு 16.11.2016 அன்று 3.00 மணி வரை பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினம் 3.30 மணி அளவில் திறக்கப் படவில்லை ;

(ii) 21.11.2016 அன்று சுமார் 6 மணி அளவில் நகராட்சிப் பொறியாளர் திரு மு. கார்த்திகேயன் மற்றும் எழுத்தர்(Clerk) திரு ப. பிரேம் ஆனந்தன் ஆகிய இருவரும் ஒப்பந்தத் தொகையில் 20% கையூட்டு வழங்கினால் ஒப்பந்தம் வழங்கமுடியும் எனத் தெரிவித்தது ;

(iii) ஒப்பந்தப் பணி மதிப்பீட்டுத் தொகையில் 3% குறைத்து கோரிய தனக்குப் பணி வழங்காமல் 20% கையூட்டு பெற்றுக் கொண்டு பணி மதிப்பீட்டுத் தொகையை விட 4.95% கூடுதலாக ஒப்பந்தத் தொகையைக் குறிப்பிட்ட நபருக்கு பணி வழங்கியது ;

(iv) நீதிப்பேராணை எண்.3153/2017-ல் வழங்கிய தீர்ப்பில் கூட ஒப்பந்தப் பணியானது சட்டத்திற்குப் புறம்பாகத்தான் அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளது ;

(v) சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்ட எதிர்மனுதாரர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளக் கோரியது .

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களை 29.08.2017 அன்று நடைபெறும் விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. 29.08.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு எதிர்மனுதாரர்கள் இருவரும் வருகை தந்து உரிய விளக்கம் அளித்தனர். **முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு வரவில்லை.**

3. எதிர்மனுதாரர்கள் விசாரணையின்போது வாக்குமூலம் அளித்ததுடன், விவரமான அறிக்கையினையும் சமர்ப்பித்தனர். அவ்வறிக்கையில், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் ஏற்கனவே தெரிவிக்கப் பட்டிருந்த நாளான 16.11.2016 அன்று 3.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி கண்காணிப்புக்குழு (Tender Scrutiny Committee ) முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகளில் Technical Bid திறக்கப்பட்டது என்றும், கண்காணிப்புக்குழு உறுப்பினர்களிடம் உரிய பதிவேட்டில் அன்றே ஒப்பம்பெறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2 ஒப்பந்ததாரர்கள் மற்றும் 4 அலுவலர்கள் அடங்கிய நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கண்காணிப்புக் குழுவில் இருந்தனர் என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்ட தினமான 16.11.2016 அன்று முறையீட்டு மனுதாரர் கலந்து கொள்ளாமல், 60 நாட்கள் கழித்து டெண்டர் கிடைக்காத காரணத்தினால் காழ்ப்புணர்ச்சியுடன் தங்கள் மீது புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், தெரிவித்துள்ளனர். 21.11.2016 அன்று தங்களை சந்தித்ததாகத் தெரிவித்துவிட்டு, 60 நாட்கள் கழித்து புகார் தெரிவித்தது முறையீட்டு மனுதாரரின் பொய்யான குற்றச்சாட்டைப் பிரதிபலிக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர். ஒப்பந்தப்பணிக்கு தாக்கல் செய்யப்பட்ட நான்கு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளில் முறையீட்டு மனுதாரரது ஒப்பந்தப்புள்ளி உட்பட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெறவில்லை என்றும், தகுதி பெற்ற திரு V. மணிவாசகம் என்பவரது விலைப்புள்ளி மட்டும் திறக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியில் தகுதிபெறாத மூவரின் விலைப்புள்ளிகள் திறக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நீதிப்பேராணை எண்.3153/2017-ல் வழங்கப்பட்ட தீர்ப்பில், ஒப்பந்தப்புள்ளியினை தேர்வு செய்ததில் சட்டத்திற்கு புறம்பாக அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளதாக முறையீட்டு மனுதாரர் தெரிவித்தது பொய்யானது எனவும் தங்களது அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணையில் வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து முறையீட்டு மனுதாரர் செய்துகொண்ட மேல்முறையீடு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

4. எதிர்மனுதாரர்களிடம் 29.08.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு, வங்கியில் போதுமான மூலதான இருப்பு இருந்ததற்கான தகுதிச்சான்றினையும், TIN சான்றிதழையும் மனுதாரர் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியுடன் சமர்ப்பிக்கவில்லை என்று நகராட்சிப் பொறியாளர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், மனுதாரரை வீட்டிற்கோ, நகராட்சி அலுவலகத்திற்கோ வரச்சொல்லவில்லை என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும்போது மனுதாரர் வருகை

தாவில்லை என்றும் குறிப்பிட்டார். மனுதாரர் தாக்கல் செய்த நீதிமன்ற வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. நகராட்சிப் பொறியாளர் விசாரணையின்போது தெரிவித்ததை இரண்டாவது எதிர்மனுதாரரான நகராட்சி எழுத்தர் திரு ப. பிரேம் ஆனந்தன் உறுதி செய்து வாக்குமூலம் அளித்தார்.

5. ஆம்பூர் நகராட்சியில் TURIP திட்டத்தின் கீழ் தார் சாலை அமைக்க கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறையாகப் பின்பற்றப் படவில்லை எனத் தெரிவித்து இந்நேர்வின் மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் 3153/2017 எண்ணிட்ட நீதிப்பேராணையை 03.02.2017 அன்று தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட வழக்கில் கீழ்க்காணும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

" This court is unable to give only adverse opinion after going through the records. Three ledgers have been produced. Prima facie it appears that there is no tampering of the records. In such view of the matter, this court is not inclined to interface with the work in progress.

However, it is made clear that in future as and when the technical bid is rejected the reasons will have to be communicated through registered post apart from sending e-mail to the tenderers concerned. Such a communication will have to be sent within three days from the date of statutory rejection. Accordingly, the writ petition stands dismissed. "

இத்தீர்ப்பினை எதிர்த்து முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த 468/2017 எண்ணிட்ட நீதிப்பேராணை மேல்முறையீட்டில் வழங்கிய தீர்ப்பிலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்காணும் தீர்ப்பினை வழங்கியுள்ளது.

" The applicant having not satisfied with the rejection of his technical bid, came forward with the writ petition with some lame excuses stating that they demanded 25% of the amount etc., which cannot be accepted at this stage. Therefore, we do not find any reason to interfere with the order of the learned Judge. "

6. ஒப்பந்தப் பணி வழங்கியது சம்பந்தமாக தன்னிடம் கையூட்டுக் கோரிய நகராட்சிப் பொறியாளர் மற்றும் எழுத்தர் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே மனுதாரரின் கோரிக்கையாகும் 29.11.2016 அன்று மேற்குறிப்பிட்ட நகராட்சி அலுவலர்கள் தன்னிடம் ஒப்பந்தப் பணி மதிப்பீட்டில் 20% கையூட்டு வழங்கக் கோரியதற்கான குற்றச்சாட்டினை மனுதாரர் தெரிவித்துள்ளார். இக்குற்றச்சாட்டு குறித்து உயர் அதிகாரிகளுக்கு உடன் தெரிவிக்க தவறிய நிலையில் சுமார் 60 நாட்கள் கழித்து 03.02.2017–ல் நீதிப்பேராணை வழக்கு ஒன்றினை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கிய நிலையில் 13.04.2017 நாளிட்ட நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனுவையும் தாக்கல் செய்துள்ளார். இம்மேல்முறையீட்டு நீதிப்பேராணை மனுவும் 21.04.2017 நாளிட்ட தீர்ப்பில் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையிலேயே, 03.05.2017 நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவர் உட்பட ஐந்து அலுவலர்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் கீழ் நகராட்சிகளின் நிர்வாகச் சீர்கேடு அல்லது நிதிமுறைகேடுகள் குறித்து பொதுப்பணியாளர்கள் என வரையறுக்கப்பட்டுள்ள நகராட்சி அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்கள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்யலாம். எனினும், இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்யப்படும் மனு, இம்முறைமன்ற நடுவத்தின் செயலருக்குத் தனிப்பட்ட முறையில் முகவரியிட்டு மட்டுமே அனுப்பப்படவேண்டும். ஆனால் மனுதாரரின்03.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவம் உட்பட ஐந்து

அலுவலர்களுக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, ஆரம்ப நிலையிலேயே இம்மனு நிராகரிக்கப்பட வேண்டியதாகும். எனினும், கையூட்டு கோரியதாக நகராட்சி அலுவலர்கள் மீது குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப் பட்டிருந்ததால், மனுதாரரின் மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு நேரடி விசாரணைக்கு மனுதாரர் அழைக்கப்பட்டார். மனுதாரர் விசாரணைக்கு வருகை தந்து உரிய விளக்கம் அளிக்கத் தவறியுள்ளார். மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு சம்பந்தபட்ட வழக்கொன்றினையும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், இதே குற்றச்சாட்டு சம்பந்தமாக 21581/2017எண்ணிட்ட நீதிமன்றப் பேராணை வழக்கொன்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்நேர்வின் மனுதாரர், தனக்கு ஒப்பந்தப் பணி வழங்கப்படவில்லையென்ற ஆதங்கத்திலேயே மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மற்றும் பிற அரசு உயர் அலுவலர்களுக்கு முறையீடு செய்யும் வழக்கத்தினைக் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. எனவே, முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கும் வராத நிலையில் குற்றச்சாட்டில் உண்மைத் தன்மை இல்லையெனக் கருதி மனுதாரரின் முறையீட்டு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 8–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

1.11.17
செயலாளர்.

பெறுநர்

1. திரு. G. குமரேசன்,
63, தாமரைக் குளம்,
ஏலகிரி அஞ்சல்,
ஜோலார்பேட்டை,
வேலூர் – 635 853.

2. திரு மு. கார்த்திகேயன்,
நகராட்சிப் பொறியாளர்,
குளித்தலை நகராட்சி.

3. ப.பிரேம் ஆனந்தன்,
உதவியாளர், ஆம்பூர் நகராட்சி.

4. நகராட்சி ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்–2